22nd September 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: காங்கிரஸ் கட்சி தேசீய அகண்ட மனப்பான்மை உள்ளது. அதை எந்த வகையிலும் வகுப்பு வாதக் கட்சி என்று சொல்ல முடியாது. எப்போதுமே, தவறு செய்பவர்கள்தான் மற்றவர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொல்வார்கள். வகுப்பு வாதத்தில் மூழ்கி அதைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறவர்களுக்கு எல்லாமே வகுப்புவாதமாகத் தோன்றுவது இயற்கை.

SRI M. KALYANASUNDARAM : தமிழ்நாட்டில் எந்தெந்தக் கட்சியை வகுப்புவாதக் கட்சியாக அரசாங்கம் கருதுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அது பற்றி ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்போதுதான் இதெல்லாம் கவனிக்கப்படும். இப்பொழுது அந்தப் பிரச்னை எழவில்லை.

Scheduled Castes' League

* 1700 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. P. SARATHI) : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் "ஷெட்யூல் வகுப்பினர் லீக்" என்னும் ஸ்தாபனம் ஒரு அரசியல் கட்சியா ?

(இ) அந்த ஸ்தாபன நிகழ்ச்சிகளில் அரசாங்க ஊழியர்கள் சேர்ந்து பங்கு எடுப்பதுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No organisation known as the 'Scheduled Classes League' has come to the notice of the Government.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த ஷெட்யூல் வகுப்பினர் லீக் என்ற ஸ்தாபனத்திற்கு ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொடி என்றிருக்கிறது—இதில் ராட்டை போட்டிருக்கிறது. அதை காங்கிரஸ்தான் போடுகிறார்கள். ஆகவே, இது ஒரு அரசியல் கட்சியா, அல்லது எந்த மாதிரியான கட்சி ? அதிகாரிகளும் இதன் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள். ஆக இது ஒரு அரசியல் கட்சிதான் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பற்றி ஒரு விவாதம் செய்தாலும் நல்லது என்று நினைக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனது விடை, No organisation known as the "Scheduled Classes League" has come to the notice of the Government.

Small-Scale Industries

* 1701 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the incentives and aids provided by the Central and Madras State Government for private entrepreneurs in starting Small-Scale Industries; and

(*b*) the value for which National Small Industries Corporation supplied machinery either for cash or on hire-purchase terms to private industrialists in Madras State during the Second Plan period, year-war?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The answer [a] is placed on the table of the House.

SRI R. SRINIVASA IYER : இந்தப் பதிலில் கொடுக்கப்பட்டிருப்பதில் எவ்வளவு தொகை எய்டாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற புள்ளி விவரம் இருக்கிறது. இவ்விதம் கடன் வாங்குகிறவர்கள் எந்தெந்தக் காரணத்திற்காக வாங்குகிறார்களோ அந்தக் காரணத்திற்காக சரியாக பிரயோசனப்படுத்துகிறார்களா என்பதைப் பற்றி விசாரணை செய்ய அதிகாரிகள் யாராவது நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? அப்படியானால் எங்கேயாவது இவ்விதம் தவறுதல்கள் நடந்திருப்பதாக சர்க்காருக்குத் தகவல்கள் வந்திருக்கின்றதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை. சாதாரணமாக இந்தக் கடன்கள் சரியான முறையில் உபயோகிக்கப்படுகின்றனவா என்று கவனிக்கப்பட்டு வருகிறது. தவறுதல்கள் நடக்கின்றது என்று சர்க்காருக்குத் தகவல்கள் ஏதாவது வந்தால் அதன் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI J. MATHA GOWDER : சிறிய தொழில்களை ஊக்குவிப்பதற்காக கடன்கொடுக்கும் பட்டியலில் தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய தொழிலுக்கு இந்த எய்ட் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆகவே இனிமேலாவது தேயிலை உற்பத்திக்கு கடன் கொடுக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேயிலை உற்பத்தி செய்கின்றவர்கள் சேர்ந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக்கொண்டால் அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசிலனை செய்யும்.

Industrial development

*1702 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்ய கைத்தொழில் இலாகாவுக்கு மத்திய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒதுக்கிய பணம் யாவும் செலவு செய்யப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

Tamil Text-books (10th Standard).

*1703 *Q.*—SRI S. M. ANNAMALAI ; கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு பத்தாவது வகுப்பிற்கு (10th Standard) தமிழ்ப் புத்தகங்கள் (Tamil Texts) இதுவரை கிடைக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) இதனால் பாடங்களைக் குறைக்க வேண்டுமென்று ஆசிரியர்களுடைய கோரிக்கை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(உ) அப்படியானால், அதைக் குறித்து சர்க்காரின் முடிவென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Under the existing arrangements text-books for detailed study in the several languages for the S.S.L.C. Public Examination are printed and published by the Madras University. It has been ascertained that the Tamil text-books for the S.S.L.C. (X Standard) Public Examination 1962 were released for sale on 29th July 1961.

(இ) Yes, Sir.

[a] Printed as Appendix II on pages 504–506 *infra*.